முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 05/2015 |
| பி.சா.1 (சுப்பிரமணியன்) |
| நாள் 03.12.2020 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

என் தாத்தா பெயர் பெரியண்ண கவுண்டர். அவருக்கு 3 மகன்கள். 2 மகள்கள். மூத்த மகன் துரைசாமி. அவர் என் அப்பா. 2வது வெங்கடாசலம். 3வது பழனிசாமி. அவர் வாதியின் தந்தை. சௌந்தரம், பாக்கியம் ஆகியோர் என் தாத்தாவின் மகள்கள். என் அப்பாவிற்கு நான் ஒரு மகன் தான். வெங்கடாசலத்திற்கு ஒரு மகன், ஒரு மகள். பழனிசாமிக்கு இரண்டு மகன்கள். அவர்கள் சுரேஸ்குமார், லட்சுமி காந்தன். சௌந்தரத்திற்கு ஒரு மகன்.இரு மகள்கள். பரமேஸ்வரி, புஸ்பலதா, கோபாலகிருஸ்ணன் ஆகியோர். என் அத்தை பாக்கியத்திற்கு இரு மகள்கள். நான் பிஎஸ்என்எல் – ல் உதவி பொது மேலாளர் ஆக பணியில் இருந்து 31.03.2014 ல் பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் வருமான வரி செலுத்தியுள்ளேன். நான் இருந்தது அரசு பணி அல்ல. பொதுத் துறை நிறுவனம். அரசு ஊழியருக்கான விதிகள் எங்களுக்கு பொருந்தாது. நான் வாங்கிய சொத்துக்கள், செய்து கொண்ட உடன்படிக்கைகள், வருமானம் ஆகியவற்றை அரசுக்கும் எனது மேலதிகாரிகளுக்கும் சமர்ப்பித்துள்ளேன் என்றால் வருமானத்தை காட்டியுள்ளேன். வரி செலுத்தியுள்ளேன். சொத்து விவரத்தை காட்ட வேண்டிய அவசியம் வரவில்லை.

(வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Uploded by

SS